www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

45

1960—1970 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட மூன்றாவது அணியான மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், சிறுபான்மைத் தமிழர் மகாசபையும், நா. சண்

அழிக்க, தமிழர் தாயகத்தை அழிக்க இடையுறாது முயன்று கொண்டிருந்த பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினதும், சிறுபான்மைத் தமிழர் மகா சபையினதும் செயற்பாடுகள் அடங்காப் பசி கொண்ட ஓநாய்க்கு கோழிக்கூட்டை திறந்து விட்ட செய்கைக்கு ஒப்பானதாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பௌத்த

கனவான்களுக்கு உருவாக்கப்பட்டிருந்த நேரத்தில் பௌத்த சிங்கள பேரினவாதிகளின் யாழ்ப்பாண வருகை - ஒரு பெரிய எதிர்விளைவை ஏற்படுத்திவிட்டது.

அடிவாங்கிய பாம்பு மூர்க்கமாக சீறி எழுவது போல், சாதியக்கனவான்கள் வீறுகொண்டு எழுந்தனர். சைவப் பாரம்பரிய மண்ணில் பௌத்த விகாரைகளா? சைவமும் தமிழும் வளர்ந்த தேசத்தில் பௌத்தமும் சிங்களமும் வளர்வதா? என்று அவர்

படுத்தி, சாதிய மற்றும் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் பௌத்த சிங்கள தேசியவாதத்துக்குத் துணை போவதை. அந்தப் போராட்டங்களை நடத்தியவர்கள் தமிழினத் துரோகிகள் என்று முத்திரை குத்தும்



குடாநாட்டில் சாதிய முரண்பாட்டை விட இனமுரண்பாடு கூர்மையாக்கப்பட்டபோது சாதி அமைப்புக்கு எதிராக தீரமிக்க ஆயுதப் போர்ாட்டம் நடத்தியவர்கள், அவர்களது கட்சியின் தத்துவார்த்தத் தவறால் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். சாதியையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஆயுத போராட்டம் நடத்திய (சீன சார்பு) கம்யூனிஸ்ட் கட்சி வர்க்கப் போராட்டம் என்ற கற்பனாவாத நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்ததால், தேசிய இன முரண்பாடு கூர்மையடைந்த நிலையில் தமிழ் சிங்கள பாட்டாளி மக்களை இணைத்த நாடுதழுவிய வர்க்கப் போராட்டம் சாத்தியமற்றுப் போய்விட, அந்தக் கட்சியின் சார்பில் ஆயுதப் போரில்

# யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவிய பௌத்த சிங்கள தேசியவாதம்


முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் நடத்திய சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்களை திசைதிருப்பி, சாதியை தக்க வைத்துக் கொண்டு 'பம்மாத்து' அரசியல் நடத்திவந்த 'தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி' என்ற கனவான்கள் அணியினர் சாதிக்கு எதிரான போராட்டமாகக் காட்டி, தங்களது 'வாக்குச்சீட்டு' அரசியலை தொடர்ந்து நடத்துவதற்கு வழி அமைத்து கொடுத்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் பௌத்த சிங்கள தேசியவாதக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிழலாக இயங்கிய இவர்கள்; தீண்டாமை ஒழிப்பு, சாதிக்கு எதிரான போராட்டம் எனும் பெயரில் பௌத்த சிங்கள பேரின அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

அதாவது இவர்கள் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களை பௌத்தர்களாக மாற்றுவதன் மூலம் சாதியை ஒழித்து விடலாம் என்ற புதிய கண்டுபிடிப்பொன்றை கண்டுபிடித்திருந்தார்கள். சாதி குறைந்த பிள்ளைகளை சைவப் பள்ளிக்கூடங்கள் அனுமதிக்க மறுத்தால், பௌத்த சிங்கள பள்ளிக்கூடங்களை உருவாக்கி அவர்களுக்கு கல்வி கற்பிக்கலாம். அதாவது சாதி குறைந்த பிள்ளைகளுக்கு பௌத்த சிங்கள கல்வி கற்பிப்பதன் மூலம், சைவத் தமிழ் கல்வி கற்கும் யாழ்ப்பாண உயர் சாதி பிள்ளைகளைவிட அதிகளவு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள வைக்கலாம் என்றும், அவ்வாறு அவர்கள் அதிக வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும்போது, பொருளாதார அடக்குமுறையிலிருந்து அவர்களது சமூகம் விடுதலையடையும். அதன் மூலம் சாதி ஒழிந்து விடும் என்றும் சாதியை ஒழிப்பதற்கான புதிய சித்தாந்த வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்கினர்.

உண்மையில் இது அப்பத்தை பங்கிட்டுக்கொள்ள பூனைகள் குரங்கிடம் சென்று ஆலோசனை கேட்ட கதை போன்றது தான். தமிழினத்தை

விகாரைகளும்; பௌத்த சிங்களப் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. சாதி ஒழிப்புப் பணி என்ற பெயரில் பௌத்த சிங்கள பேரினவாதத்தை யாழ்ப்பாணக் குடா நாட்டில் வேரூன்ற வைத்து தமிழினத்தை அதன் தாயக மண்ணிலேயே



அழித்துச் சிதைக்கும் வேலையைச் செய்வதற்கு பௌத்த பிக்குகளும், சிங்கள ஆசிரியர்களும் படையெடுத்து வந்தனர்.

உண்மையில் ஒரு அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கு அதை விடப் பெரிய இன்னொரு அடிமைத்தனத்தை தேர்ந்தெடுத்த மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினரதும், சிறுபான்மை தமிழர் மகா சபையினதும் முட்டாள்த்தனமான நடவடிக்கையானது, யாழ்ப்பாணக் குடா நாட்டில் சாதியை ஒழிப்பதற்குப் பதிலாக அதை நிரந்தரமாக்கி வைத்திருப்பதற்கே துணை போனது.

நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் நடாத்திய ஆயுதப் போராட்டம் காரணமாகவும் - அதையொட்டி உருவாகிய அரசியல் விழிப்புணர்ச்சி காரணமாகவும் யாழ்ப்பாண சாதி அமைப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தது. சாதி ரீதியாக தம்மால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் போராடத் தொடங்கிவிட்டார்கள். திருப்பி அடிக்கத் தொடங்கி விட்டார்கள். இனியும் அவர்களை அடக்கி வைத்திருக்க முடியாது என்ற நெருக்கடி சாதியக்

கள் குமுறி எழுந்தனர். சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டமும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது, தங்களது வாக்குச் சீட்டு அரசியலுக்கு பங்கம் வந்துவிடும் என்று நினைத்து மதில் மேல் பூனைகளாக இருந்த தமிழரசுக்கட்சியின் அடுத்த தேர்தலுக்கு வாக்குக் கேட்பதற்கு, ஒரு புதிய காரணம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் களத்தில் இறங்கினர்.

தமிழர்களை ஒன்றுபட விடமுடியாமல் பிரித்து வைத்திருப்பது சாதி. அதை ஒழித்து தமிழர்களை ஒன்றுபட வைப்பதன் மூலம்தான், பௌத்த சிங்கள பேரினவாத அடக்குமுறையிலிருந்து தமிழினத்தை விடுவிக்க முடியும், தமிழர் தாயகத்தை மீட்க முடியும். தமிழர்கள் சாதி ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் பிரிந்திருப்பதால்தான், பௌத்த சிங்கள பேரினவாதிகள் தமிழர்களை அடக்கி, தமிழர் தாயகத்தை அபகரிக்க நினைக்கிறார்கள் என்கின்ற அடிப்படை உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி சாதியையும், பிரதேசவாதத்தையும் இல்லாதொ

**சாதி ஒழிப்புப் பணி என்ற பெயரில் பௌத்த சிங்கள பேரினவாதத்தை யாழ்ப்பாணக் குடா நாட்டில் வேரூன்ற வைத்து தமிழினத்தை அதன் தாயக மண்ணிலேயே அழித்துச் சிதைக்கும் வேலையைச் செய்வதற்கு பௌத்த பிக்குகளும், சிங்கள ஆசிரியர்களும் படையெடுத்து வந்தனர்.**

ழிப்பதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக, மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் செய்த துரோகத்தனத்தோடு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போராட்டங்களையும் இணைத்துக் கொச்சைப்

வேலையை 1970-ல் யாழ்ப்பாணத்தில் சாதியக்கனவான்கள் திட்டமிட்டுச் செய்தனர்.

நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, இன முரண்பாட்டை கணக்கில் எடுக்காத தவறான வர்க்கப் பார்வை காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிகழ்ந்த பௌத்த சிங்கள பேரினவாத ஊடுருவலை எதிர்த்துப் போராடத்தவறியதும், தமிழ் சிங்கள பாட்டாளி வர்க்கத்தை ஒன்றிணைத்தல் என்ற பெயரில், தென்னிலங்கையில் குடா நாட்டின் சாதிய எதிர்ப்புப் போராட்டம் பற்றி மேற்கொண்ட பிரச்சாரங்களும் அவர்களையும் இனவிரோதிகள் என்று முத்திரை குத்துவதற்கு துணை புரிந்தன.

குறிப்பாக வர்க்க ஒற்றுமை என்ற பெயரில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய சாதிய அடக்குமுறை பற்றித் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியினர் (சீன - மொஸ்கோ சார்பு 2 அணிகளும்) செய்த பிரச்சாரங்கள்- தமிழர்கள் ஒ்ரு தேசிய இனமல்ல. அவர்கள் ஒரு சிறுபான்மை இனக்குழுவினரே அவர்களுக்குள்ளேயே மிகக் கொடுமையான அடக்குமுறை இருக்கிறது என்று பௌத்த சிங்கள தேசியவாதிகள் வெளியுலகிற்கு காட்டுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

மறுபுறத்தில் யாழ்ப்பாணக்

குதித்தவர்கள் 'வெறும் சாதியப் போராட்டக்காரர்கள்' என்ற குறுகிய வட்டத்துக்குள் தள்ளப்படும் நிலை ஏற்பட்டது. இவர்களால் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட ஆயுதப்போராட்ட உணர்வு தொடர்ந்து சரியான முறையில் வழி நடாத்திச் செல்லப்படாததால் ஊர்ச் சண்டியர்களையும், அடியாட்களையும் உருவாக்கும் நிலைக்கு சீரழிந்து போனது.

வெட்டப்பட்ட சாதியமரம் பழையபடி வேர்விட்டு கிளை விட்டுத் தழைக்க ஆரம்பித்தது. தீண்டாமையின் வேகம் முன்பு போல் இல்லையென்றாலும் சாதி அமைப்பினுடைய அழுத்தங்கள் தொடரவே செய்தன. 1970-இற்குப் பின்பும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்படாத ஆலயங்கள், அவர்களது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுமதிக்காத பாடசாலைகள், தனியான மூக்குப்பேணி வைத்து தேநீர் கொடுக்கும் தேநீர்க் கடைகள் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கவே செய்தன.

ஆயினும் 1960-களில் இருந்த யாழ்ப்பாண சமூகத்திற்கும், 1970-ம் ஆண்டு பிறந்த போது இருந்த யாழ்ப்பாண சமூகத்திற்குமிடையில் கருத்தியல் ரீதியாக பாரிய மாற்றம் ஒன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

1960-களில் சமூக மாற்றத்திற்கான அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான, போராட்டம் பற்றிய சிந்தனைகளும் எழுச்சியும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் உரிமைப் போராட்டங்களை எப்படி நசுக்குவது, உரிமைப் போர் நடாத்துபவர்களை எப்படி பிரித்தாள்வது என்கின்ற அதிகார வெறித்தனம் சாதியக்கனவான்கள் மத்தியில் இருந்தது. இன விடுதலை என்பது குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை இவற்றுக்கு அடுத்தபடியாகத்தான் இருந்தது.

ஆனால் 1970-ம் ஆண்டு பிறந்த போது இனவிடுதலை பற்றிய சிந்தனை முதன்மைப்பட்டு இருந்தது.

- நக்கீரன்

படிப்பகம்